[22nd January 1965

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஏராளமாகப் பெண்கள் இப்பொழுது கல்லூரிகளில் படிக்கிறார்கள், ஆகவே அவர்களுக்குத் தனியாக ஒரு கல்லூரி இருந்தால் நல்லது என்று சொன்னேன். அதற்காக நானே, சர்க்காரே கல்லூரி வைக்க வேண்டும் என்று சொல்லுவதா ? அவர்களே முன் வரவேண்டும்; அங்குள்ளவர்கள் முன் வரவேண்டும். இப்பொழுது இருக்கும் கல்லூரிக்குக் கூட, தொகைகள் கொடுப்பதாகச் சொல்லிவிட்டு, கடைசியில் சொற்பத் தொகையைக் கொடுத்துவிட்டு அரசாங்கம் பார்த்துக்கொள்ளும் என்று விட்டு விட்டார்கள். பெண்கள் கல்லூரி தனியாக வேண்டும் என்றால் அவர்களாகவே ஏற்பாடு செய்ய முன்வந்தால் சர்க்கார் உதவிசெய்யும்.

MR. SPEAKER : Now I am taking up Question No. 79 as the concerned Hon. Minister has to go out on urgent duty.

Motor boats for fishermen

* 79. *Q.*—SRI C. SRINIVASAN : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(*a*) whether any motor boats have been given to fishermen in any of the places in the taluks of Ramanathapuram, Tiruvadanai and Mudukulathur in Ramanathapuram district; and

(*b*) if not, whether there is any proposal to allot some to those taluks?

THE HON. SRI G. BHUVARAHAN : (*a*) & (*b*) Twenty-one mechanised boats have so far been given to fishermen in Ramanathapuram taluk of Ramanathapuram district. In addition, four boats will be given to fishermen in Ramanathapuram taluk and one boat to fishermen groups of Mudukulathur taluk as soon as the boats under construction are completed. No application is pending from Tiruvadanai taluk.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் கீழ் ராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் வழங்கப் படுகிறதா அல்லது எங்கள் மாவட்டத்தில் மரக்காணத்தில் இருந்து கோட்டக்குப்பம் வரை இருக்கும் மீனவர்களுக்கும் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. கோ. பூவராகன் : மாநிலத்தில் கடல் ஓரப்பகுதியில் இருக்கும் எல்லா இடங்களிலும், எந்த மாவட்டமாக இருந்தாலும் கொடுக்கப்படும். மரக்காணத்திலிருந்து யாராவது மனுப்போட்டால், அது பரிசீலனை செய்யப்படும்.

திரு. ஏ. ஆறுமுகம் : சார், கடலோரப் பகுதியில்லாத மற்றப் பகுதிகளில் இருக்கும் மீனவர்களுக்கும் உதவி செய்யத் திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினருடைய ஊர் குளத்தில் போட் ஓடுகிறதா ?

கனம் திரு. கோ. பூவராகன் : படகு கொடுக்கத் திட்டம் இல்லை.

22nd January 1965]

திரு. கரு. சீமைச்சாமி: சார், மீனவர்கள் படகு வேண்டும் என்று மனுப் போட்டால், படகு கொடுக்கப்படுகிறதா அல்லது பணம் கொடுத்து படகை அவர்களே வாங்கிக் கொள்ளச் சொல்லப் படுகிறார்களா?

கனம் திரு. கோ. பூவராகன்: இது விசைப் படகைப் பொருத்தது. படகு தான் கட்டிக் கொடுக்கிறார்கள்.

திரு. பி. கே. மூக்கையா தேவர்: சார், சமீபத்திலே தனுஷ்கோடியிலே பாதிக்கப்பட்ட மீனவர்கள் படகுகள் இல்லாமல் இருப்பதால், அவர்களுக்கு முதல் இடம் கொடுத்து உதவி செய்ய அரசாங்கம் உத்தேசிக்குமா?

கனம் திரு. கோ. பூவராகன்: ராமேச்வரம், தனுஷ்கோடி இங்கெல்லாம் பாதிக்கப்பட்டவர்களெல்லாம் என்னென்ன படகுகள் வைத்திருந்தார்களோ அதேபோன்று படகுகள் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, இந்த விசைப்படகுகள் எல்லாம், அந்தப் பகுதி மக்களே வாங்குகிறார்களா? அல்லது சென்னையில் இருப்பவர்கள் கூட வாங்கி நடத்துவதாக கேள்விப்படுகிறேன், அது சரியா?

கனம் திரு. கோ. பூவராகன்: அப்படிப்பட்ட புகார் இல்லை. மனுப்போட்ட மீனவர்களுக்குத்தான் கொடுக்கிறோம்.

Arts College at Paramakudi

* 57 Q.—SRI C. SRINIVASAN: Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to start an Arts College at Paramakudi in 1965?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No.

University at Madurai

* 58 Q.—SRI M. KALYANASUNDARAM:
SRI M. S. SELVARAJAN:
PULAVAR K. GOVINDAN:
} Will the Hon the Chief Minister be pleased to state with reference to the answer given to Question No. 391 on 25th March 1964, the present stage of the proposal to locate a University at Madurai?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: An expert committee has been constituted under the Chairmanship of the Director of Public Instruction, to work out the details relating to the setting up of the University. The report of the Committee is awaited. In the meantime special staff has been sanctioned for acquiring the necessary land expeditiously. Permission has also been accorded for the transfer of the adjacent poromboke land.